இரவு ஏழரையாகிவிட்டதை உணர்ந்த சதாசிவம், ''ஆபீஸில் இன்று வேலை முதுகு ஒடிந்துவிட்டது. இருந்தாலும் பரவாயில்லை. உனக்குக் குறை என்னத்திற்கு? நடனம் பார்க்கப் புறப்படுகிறாயா? வாசலிலே கார் தயாராக இருக்கிறது'' என்றான்.

''நம் சமையற்காரம்மா பெண் சுந்தரி நடனம் பார்க்க வேணுமென்று ஆசைப்பட்டாள். அவளுக்கு அந்த டிக்கெட்டுகளைக் கொடுத்துவிட்டேன். ஆமாம், நீங்கள் ரொம்பக் களைப்பாக இருக்கிறீர்களே, காபி கொண்டு வரட்டுமா?'' என்று புன்னகையுடன் கேட்ட ஜயா திருப்தியுடன் உள்ளே திரும்பிச் சென்றாள்.

நடனக் காட்சியை ரஸிக்காது தூங்கும் கணவனுடன் அதைப் பார்ப்பதைவிட இரண்டு இளந் தம்பதிகளின் சந்தோஷத்திற்காக உபயோகப்பட்ட முதல் வகுப்பு டிக்கெட்டுகளைப்பற்றி மறந்தவளாகத் தன் வேலையைக் கவனிக்க ஆரம்பித்தாள் ஜயா.

# பாஞ்சாலியின் சபதம்

அந்திச் சூரியன் மறையும் நேரம். பக்கத்திலிருந்த மாந்தோப்பிலிருந்து குளுமையான காற்று வீசிக்கொண்டிருந்தது. முதல் நாள் பெய்த மழையில் கலங்கிக் கரை புரண்டுகொண்டிருந்தது சின்ன வாய்க்கால் நீர். கும்பலாகத் தண்ணீரின்மீது மிதந்து வந்த இலைச் சருகுகளைக் குடத்தால் ஒதுக்கிவிட்டுக் குபக்கென நீரை முகந்தாள் சொக்கி. குடத்தைத் தூக்கி இடையில் வைத்துக்கொண்ட அவள் திரும்பிப் பார்த்தாள். பித்தளைக் குடத்தைப் பொன் குடமாக்கிவிட எண்ணங்கொண்டவள் போல் அழுத்தி அழுத்தித் தேய்த்துக் கொண்டிருந்த தோழி பாஞ்சாலியைப் பரிகாசமாகப் பார்த்துக்கொண்டே சொக்கி கரைமீது

குடத்தை இறக்கி வைத்துவிட்டு உட்கார்ந்தாள். சற்றுத் தூரத்திலிருந்த மாந்தோப்பிலிருந்து 'கூகூ' என்று குயில் ஒன்று கூவும் சத்தம் கேட்டது. சொக்கியின் கற்பனை கட்ட விழ்ந்துகொண்டு வெளிக் கிளம்பிவிடவே, ''பாஞ்சாலி! சங்கதி தெரியுமா உனக்கு?'' என ஆரம்பித்தாள்.

''என்ன சங்கதி எனக்குத் தெரியப் போகுது! பொழுது விடிஞ்சுட்டா அஸ்தமிக்கிறவரை வீட்டிலே மாடுபோல உழைக்கிறதைத் தவிர ஊர் சங்கதி எனக்கென்ன தெரியும்!'' என்று அலுப்புடன் கூறிய பாஞ்சாலி குடத்தை நீரில் கழுவினாள்.

''மாந்தோப்புப் பெரியசாமி செத்ததும் அவருக்குக் குழந்தை குட்டி இல்லாததனாலே சொத்து எல்லாம் தங்கச்சி மகன் தங்கசாமிக்குத்தான் சேரப் போகுதுன்னு ஊரிலே சொல்லிக் கொண்டாங்க, இல்லையா! கிழவன் செத்துப் பதினெட்டு நாள்கூட முழுக்க ஆவல்லை. தங்க சாமி கழுகுபோல இன்னிக்குக் காலையிலேயே வந்துட்டா னாம் சொத்தை ஏத்துக்கொள்ள'' என்றாள் சொக்கி.

''உனக்கு சங்கதி எப்படித் தெரிஞ்சிச்சு?'' என்று பிரமிப்புடன் கேட்டாள் பாஞ்சாலி. கிழவன் பெரியசாமி யின் தங்கச்சி மகன் தங்கசாமியை அவள் நேரில் பார்க்கா விடினும் பல விஷயங்கள் கேள்விப்பட்டிருந்தாள். ஐம்பது கல்தூரமிருந்த நகரத்திலே தங்கசாமி பழக்கடை வைத்து வியாபாரம் செய்துகொண்டிருந்தான் என்றும், கிழவன் மாந்தோப்புப் பழங்கள் எல்லாம் அவன் கடைக்குத்தான் பறித்து அனுப்பப்படுகின்றன என்றும் கேள்விப்பட்டிருந் தாள். அதெல்லாம்விட முக்கியமாக, தங்கசாமி பார் வைக்கும் அழகாக இருப்பான் என்றும், சின்னஞ்சிறு வயதிலேயே இரண்டு தடவை கல்யாணம் செய்துகொண்டு கூட வாழ்க்கையில் திருப்தி இல்லாமல் தாறுமாறாக வாழ் கிறவன் என்றும் கேள்விப்பட்டிருந்தாள்.



''ஆமாம்! அந்தத் தங்கசாமி...'' என்று மேலே பாஞ்சாலி ஆரம்பிப்பதற்குள் குறுக்கிட்ட சொக்கி, 'அந்தத் தங்கசாமி ரொம்ப கருவம் பிடிச்சவன். முதலிலே கட்டின பெண் ஜாதிக்குப் பிள்ளையில்லையின்னு தள்ளிவச் சுட்டான். இரண்டாவது பெண் ஜாதி கிளிபோல இருக் கிறாளாம். அவளையும் தள்ளிவிட்டு மூணாவது கல்யாணம் செய்துகொள்ள இப்ப யோசனையாம்! ஆனாலும் மனுஷ னுக்கு இத்தனை துஷ்டத்தனம் ஆகாது!'' என்று சொல்லிப் பெருமூச்செறிந்தாள்.

''அப்படின்னா எனக்கு ஒரு யோசனை தோணுது!'' என்று கூறிய பாஞ்சாலி கண்ணைச் சிமிட்டுவிட்டு, ''மாந் தோப்புத் தங்கசாமி மூன்றாம் கல்யாணம் பண்ணிக்கிற தாக உத்தேசித்திருந்தால் நானே அவனை மூணாம் பெண் ஜாதியாகக் கட்டிக்கலாமென்று பார்க்கிறேன். தாயில்லாப் பெண்ணு நான். சின்னம்மாளின் பிடுங்கல் வீட்டிலே சகிக்க முடியல்லை. எவனையாவது கட்டிக்கொண்டு வீட்டை விட்டுப் புறப்பட்டால் போதும்னு இருக்குது. தங்கசாமி பார்க்க அழகாயிருப்பானாம், வயசும் கொஞ்சந்தானாம். இத்தனை பெரிய மாந்தோப்பு, நடுவிலே நல்ல கட்டிகாரை வீடு, டவுனிலே பெரிய பழக்கடை! இன்னும் எத்தனையோ சொத்து அவனுக்கு இருக்குது. மூணாம் பெண் ஜாதியா னால் என்ன, முப்பதாவது பெண் ஜாதியானால் என்ன? பணக்காரன் ஆச்சே, அதைப் பாரு முதல்லே!'' என்றாள் கேலியாக.

''பணக்காரனாம், பணக்காரன்! போயும் போயும் உன் புத்தி இப்படியா போகணும்? முதல் இரண்டு பெண் ஜாதி யும் அவன் கையிலே பட்ட கஷ்டம் கொஞ்சம் நஞ்சம் இல்லையாம். கோவம் வந்துச்சுன்னா அடிச்சுக் சொன்னுடு வானாம். பணம் ஒண்ணு மட்டும் உசத்தியா ஆயிடுமா? குணம் வேண்டாமா? என்னைக் கட்டிக்கிறேன்னு காலிலே விழுந்தாக்கூட நான் மாட்டேன்'' என்றாள் சொக்கி,

கொஞ்சம் கோபத்துடன்.

''இப்படிப்பட்ட துஷ்டப் பசங்களுக்கு நல்ல பெண் ஜாதி கிடைச்சால் அவங்க எப்படி மாறிடுவாங்க தெரியுமா? நான் மட்டும் அந்தத் தங்கசாமியைக் கட்டிக்கொண்டால், அப்படியே ஆளை ஆட்டி வச்சு, என் காலிலே விழுந்து கும்பிடறாப்பல பண்ணிட மாட்டேனா?'' என்று சிரித்தாள் பாஞ்சாலி.

''இந்தக் கதையெல்லாம் படிக்கிறதிலே பிரயோஜன மில்லை. தங்கசாமி கர்வி. ஏழைப் பெண் பாஞ்சாலியைக் கட்டிக்க அவன் காத்துக் கிடக்கல்லை. மூணாந்தார மானாலும் நாட்டாண்மை நடேசன் மகளைக் கட்டிப் பானே ஒழிய......'' என்று முடிப்பதற்குள் பாஞ்சாலி கோபத்துடன், ''இதோ பார் சொக்கி, இந்தத் தங்க சாமியை நான் கட்டிக்காட்டி பாஞ்சாலி இல்லை!'' என்று முகத்தைக் குலுக்கினாள்.

''அடாடா! பெரிய சபதம் வச்சிட்டியே! எப்படிக் கட் டிக்கப் போறே?'' என்று புன்னகை செய்தாள் சொக்கி.

''எப்படியா! இன்னும் இரண்டு நாளில் எங்கப்பன் சந்தைக்கு மாம்பழம் வாங்கி வர மாந்தோப்புக்கு வருவார். அவரோடகூட வராப்போல நானும் வருவேன். கிழவன் செத்ததனாலே கூடைக்காரங்களுக்குப் பழம் விக்கிற வேலை இப்ப தங்கசாமிதானே செய்தாகணும்? நேருக்கு நேர் பார்த்துப் பேசி...'' என்று நிறுத்திய பாஞ் சாலிக்குத் தனது கற்பனை மிகவும் சங்கோசத்தை உண்டாக் கவே மௌனமானாள்.

''உன் பேச்சைக் கேட்டு மயங்கித் தங்கசாமி ஒரு மாலையை உன் கழுத்திலே உடனே தூக்கிப்போட்டு 'ஆகா பாஞ்சாலி, என் கண்ணே!' என்பானாக்கும்! ஐயோ, பெண்ணே! தங்கசாமி உன்னைப்போல எத்தனை பேரைப் பார்த்திருப்பான்! அவன்கிட்ட உன் ஜாலம் பலிக்காது!'' என்று ஏளனமாகக் கூறிய சொக்கி குடத்தைத் தூக்கி



இடுப்பில் வைத்துக்கொண்டு திரும்பினாள். உடனே திடுக்கிட்டு, ''பாஞ்சாலி!'' என்று மெல்லிய குரலில் கூப்பிட்டாள்.

''அதோ பார்! தங்கசாமி!'' எனத் திகைப்புடன் கூவிய அவர்கள் பக்கம் மாந்தோப்புப் புது எஜமான் தங்கசாமி திரும்பினான். ஊரார் வர்ணித்த விதம் தங்கசாமி சிவப்பு நிறமாக இல்லாவிடினும், களை பொருந்திய அவனது முகத்தைப் பார்த்த பாஞ்சாலியின் நெஞ்சம் படபடவென்று அடித்துக்கொண்டது. அவனும் அதே சமயம் எதையோ கண்டு மிரண்டுவிட்டவன் போல் பாஞ்சாலியைப் பார்த்து ஒரு கணம் திகைப்புடன் நின்றுவிட்டான். பிறகு வேகமாக மாந்தோப்புக்குள் நடந்து சென்று மறைந்தான்.

இரண்டு நாட்கள் சென்றன. பாஞ்சாலியின் தகப்பன் கந்தப்பனுக்கு ஜுரம் வந்துவிடவே அடுத்த நாள் சந்தைக்கு மாம்பழம் வாங்கி வரப் பாஞ்சாலிதான் மாந்தோப்புக்குக் கூடையுடன் செல்ல வேண்டும் என்று சின்னம்மா உத்தர விட்டாள். எதிர்பாராத இந்தச் சந்தர்ப்பம் பாஞ்சாலியின் உள்ளத்தைக் குதூகலிக்கச் செய்தாலும், அவளுக்கு மாந் தோப்பிற்குள் நுழையவே வெட்கமாக இருந்தது. சந்தைக்குப் பழம் வாங்க வந்தவர்கள் கூட்டம் அங்கே நிறைய இருந்தது. மற்றவர்களைப் போல் கூடையை வைத்துக்கொண்டு பாஞ்சாலியும் பொறுமையுடன் காத்திருந்தாள்.

புழைக்கடையிலிருந்து வெளிமுற்றத்துக்கு வந்த தங்கசாமி அவளைப் பார்த்ததும் திகைப்புடன் நின்றான். பிறகு பாராதவன்போலவே வந்தவர்கள் எல்லோருக்கும் விலை பேசிப் பழங்களை எண்ணிக்கொடுப்பதில் முனைந் தான். பாஞ்சாலி உட்கார்ந்து உட்கார்ந்து அலுத்துப் போய் விட்டாள். அவளுக்குப் பின்னால் வந்தவர்கள் எல்லோரும் கூடை பழத்துடன் திரும்பிவிட்டார்கள். தங்கசாமி வேண்டு மென்றே அவள் பக்கங்கூடத்திரும்பிப் பாராமல் காலத்தை

கடத்திக்கொண்டிருந்தான். 'சொக்கி சொன்னபடி அவன் கர்விதான், சந்தேகமென்ன? முன்னாடி வந்த பெண் பிள்ளையை நிறுத்திவைத்துவிட்டு, பின்னால் வந்தவர் களுக்கு விற்பனை செய்கிறானே? நெஞ்சழுத்தக்காரன்!'— இவ்வாறு மனசிலே கடிந்துகொண்ட பாஞ்சாலிக்கு அழுகையே வந்துவிட்டது. காலை எட்டு மணிக்கு வந்தவள் பகல் பன்னிரண்டு மணிக்குக்கூடப் பழம் வாங்கிய பாடில்லை என்றால்! சின்னம்மாள் கோபிப்பாளே என்ற பயம் வேறு அவளைப் பிடித்து வாட்டியது.

''என்ன வேணும் உனக்கு?'' என்று அதட்டிய குரலைக் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்திருந்த பாஞ்சாலி மற்ற எல்லோரும் போய்விட்டதையும் தான் மட்டும் தனியே தங்கசாமியுடன் அங்கே இருப்பதையும் உணர்ந்து கலவரத் துடன், ''பழம் வாங்க வந்தேன்!'' என்றாள் தடுமாற்ற மாக.

''நிஜமாகவா?'' என்று கேட்ட தங்கசாமி சிரித்தான்.

அவனது கேலிச் சிரிப்பின் அர்த்தத்தை அறிந்து கொள்ளாத பாஞ்சாலி குழப்பத்துடன், ''எங்கப்பா இங்கே தான் வழக்கமாகச் சந்தைக்குப் போகப் பழங்கள் வாங்க றது, அதனாலே...'' என்று இழுத்தாள்.

''என்னுடன் நேருக்கு நேர் பேசி, என் மனசை மயக்கி, என்னைக் கட்டிக்கொண்டு போக வந்ததாவல்லவா நான் நினைச்சேன்? உண்மையிலே நீயும் பழம் வாங்க வந்திருக் கிறது தெரியாம போச்சே! அடாடா!'' என்று கேலியாகச் சிரித்த தங்கசாமி, அவளைக் குறும்புத்தனமாகப் பார்த் தான்.

பாஞ்சாலிக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவளும் அவள் சிநேகிதியும் அன்று கேலியாக வாய்க்காங்கரையில் பேசிய சம்பாஷணையை ஒட்டுக் கேட்டிருக்கிறான் தங்க சாமி! அவமானம் தாங்கமுடியாத பஞ்சாலிக்கு அழுகை நெஞ்சை அடைத்துக்கொண்டது. விளையாட்டாகச்



சொன்னதைக் கேட்டுவிட்டு எத்தனை விஷமமாகப் பேசிச் சிரிக்கிறான்! கூடையைத் தூக்கிக்கொண்டு அவள் அவ் விடத்தை விட்டு ஓட நினைத்தாள். அதை ஊகித்தவன் போல் தங்கசாமி அவளுக்கு முன்னால் தாவி, கூடையைக் கையில் தாங்கிக்கொண்டான். பாஞ்சாலி ஸ்தம்பித்துப் போய் நின்றுவிட்டாள். இன்னும் என்ன வேடிக்கை செய்யப் போகிறானோ என்று அவள் மனம் மிகவும் கலவர மடைந்தது.

பக்கத்து அறைக்குள் நுழைந்து கூடை நிறையப் பழங்களை நிரப்பிக்கொண்டு வந்த தங்கசாமி, ''இந்தா எடுத்துப் போ! பிறகு உங்கப்பனிடம் கணக்குப் பார்த்து விலை வாங்கிக்கொள்கிறேன்!'' என்று தணிவாகக் கூறி, கூடையைக் கையில் கொடுத்துவிட்டு அவளை நிமிர்ந்து பார்த்தான்.

அவன் முகத்திலே ததும்பி நின்ற விஷமச் சிரிப்பைப் பார்த்துச் சகிக்க முடியாத பாஞ்சாலி கூடையைக் கையில் எடுத்துக்கொண்டு வேகமாக வாயிற்படிப் பக்கம் திரும்பி னாள். அவ்வளவுதான்! குழப்பத்தில் வாசல்படி தடுக்க, தடால் என்று கூடையைப் போட்டுக்கொண்டு கீழே விழுந்துவிட்டாள். கூடையிலிருந்த மாம்பழங்கள் யாவும் சிதறி நாலு திக்கிலும் உருண்டு ஓடின.

''அத்தனை அவசரமா உனக்கு?'' என்று கேட்டுக் கொண்டே அருகில் வந்த தங்கசாமியைக் கண்டதும் பயத் துடன் துள்ளி எழுந்து நின்றாள் பாஞ்சாலி. சிதறி ஓடிப் போன பழங்களைப் பொறுக்கிக் கூடையில் எடுத்து நிரப்பி, கூடையைத் தூக்கிவைத்துக்கொண்டே, ''உன்னை நான் ஒரு நாளும் கட்டிக்கப் போவதில்லை'' என்றாள் ஆத்திர மாக அவனைப் பார்த்து.

''கடைசியில் அப்படிச் சொல்லி ஏமாத்திவிடவா போகிறாய்! மூணாவது பெண் ஜாதியாக என்னைக் கட்டிக் கொண்டு என்னைத் திருத்தி நல்ல வழிக்குக் கொண்டு

வருவேன்னு நான் ஆசையா எதிர்பார்க்கையிலே நீ மோசம்
பண்ணினால்...'' என்று சிரித்தான் தங்கசாமி.

பாஞ்சாலிக்கு வந்த கோபத்தில் அந்தக் கூடை பழங்
களை அவன் தலைமேலேயே கொட்ட வேணும்போலிருந்
தது. ஆனால் பல்லைக் கடித்துக்கொண்டு அவள் வேகமாக
மாந்தோப்பை விட்டு வெளியேறினாள்.

மறுநாள் .சந்தைக்குப் பாஞ்சாலிதான் பழங்களை
விற்பனைக்கு எடுத்துச் செல்ல வேண்டியிருந்தது. பழக்
கூடைக்குமுன் உட்கார்ந்தே அவள் முதல் நாள் நடந்த
சம்பவங்களை நினைத்துச் சிந்தனைக்குள் ஆழ்ந்து போய்
விட்டிருந்தாள். வெகு நேரமாகியும் அன்று அவள் பழங்கள்
ஒன்றும் விற்பனையே ஆகாமல் இருந்தது. இருட்டுவதற்குச்
சில மணி நேரந்தான் இருந்தது. அதற்குள் பழங்களை
விற்காவிடில் சின்னம்மாவிடம் வசவுகள் வாங்க நேருமே
எனக் கவலையுடன் சுற்று முற்றும் பார்த்தாள். அவள்
பிரார்த்தனையைக் கடவுள் ஏற்றுக்கொண்டு விட்டார்
எனப் பாஞ்சாலி நினைத்தாள். சந்தை கலையுமுன்பு
அவசரமாக ஓடிவந்த ஒரு மனிதன் பழங்களை அப்படியே
மொத்த விலைக்குப் பேசி எடுத்துச் சென்றுவிட்டான்.
பழம் விற்ற பணத்தை எண்ணி முடிந்துவிட்டு, கூடையை
எடுத்துக்கொண்டு எழுந்திருந்த பாஞ்சாலி தன் முன்னால்
தங்கசாமி நிற்பதைக் கண்டாள். ''கெட்டிக்காரிதான் நீ!
டஜன் ரெண்டு ரூபாய்க்கு வாங்கினதை நாலு ரூபாய்க்கு
வித்துட்டியே!'' எனக் கேட்ட தங்கசாமி பல்லை இளித்
தான்.

கோபமாக ஏதோ சொல்ல அவள் வாயைத் திறக்கு
முன், ''பாவம், விற்பனையாகாது அப்படியே உட்கார்ந்
திருக்கியேன்னு என் ஆளை அனுப்பி நானே விலை
கொடுத்து வாங்கிக்கொண்டேன்'' என்று அவன் சிரித்
தான். பாஞ்சாலிக்குத் தன்னையே நம்ப முடியவில்லை.
சொக்கி சொன்னபடி தங்கசாமி ஜாலமெல்லாம் கற்ற



பெரிய ஆசாமிதான் போலிருக்கிறது என எண்ணி மறு
மொழி கொடுக்காது சந்தைக் கூட்டத்தில் சென்றுமறைந்து
விட்டாள்.

நாலைந்து நாட்கள் சென்றன. பக்கத்து ஊர்த் திரு
விழாவிற்காக அழைக்க வந்த பெரியம்மாவுடன் இதுதான்
சமயம் என்று கிளம்பிய பாஞ்சாலி திருவிழா கழித்து
உடனே திரும்பாமல், நிம்மதியா இருந்து வரலாமென்று
பத்து நாட்கள் பெரியம்மா வீட்டிலே முகாமிட்டு
விட்டாள்.

பெண்ணைத் திரும்பக் கூட்டிப்போக வந்த கந்தப்பன்
ஒரு செய்தியும் கொண்டு வந்தான். அதைக் கேட்ட பெரி
யம்மா சந்தோஷப்பட்டு ஆர்ப்பரித்தாள். மாந்தோப்புத்
தங்கசாமி பாஞ்சாலியைத் தனக்குக் கட்டிக்கொடுக்கும்படி
கேட்டதாகவும், அதற்கு ஒப்புக்கொண்ட கந்தப்பன்
முகூர்த்தத்திற்குத் தேதி வைத்துவிட்டதாகவும், கல்யாணத்
திற்குச் சாமான்கள் வாங்கவேண்டுமாதலால் சீக்கிரமே
பெண்ணைக் கூட்டிப்போக வந்ததாகவும் கூறினான்.
சங்கதியைக் கேட்ட பாஞ்சாலிக்குத் திகைப்புத் தாங்க
முடியவில்லை. துஷ்டப் பயல் தங்கசாமி. பாஞ்சாலியின்
அழகைக் கண்டு மயங்கி அவள்மேல் ஒரு கண் வைத்து
விட்டான். கந்தப்பனும் அவன் சொத்துக்கு ஆசைப்பட்டு
ஒப்புக்கொண்டுவிட்டான். சொக்கி கூறியபடி பாஞ்
சாலியை மட்டும் அவன் நன்றாக நடத்துவான் என்பது
என்ன நிச்சயம்!— அவளுக்குத் தங்கசாமியைக் கட்டிக்
கொள்ளத் திடீரெனப் பிடிக்காமல் போயிற்று.

அன்று தனியாகத் தண்ணீர் எடுக்க வாய்க்காலுக்கு
வந்திருந்தாள் பாஞ்சாலி. அவளுக்கும் தங்கசாமிக்கும்
கல்யாணம் நிச்சயமாய் விட்ட சங்கதியை அறிந்த அன்றி
லிருந்து சொக்கி அவளுடன் பேசுவதைக்கூட நிறுத்திக்
கொண்டுவிட்டாள். பாஞ்சாலி தன் சபதப்படி தங்கசாமி
யைக் கட்டிக்கொள்ளப் போகிறாள் என்று சொக்கிக்குப்

பொறாமையாக இருந்தது. ''ஐயோ, நம் கதி இப்படியா!'' என எண்ணிய பாஞ்சாலிக்கு அழுகையே வந்துவிட்டது. அப்படியே அசந்து போய் உட்கார்ந்துவிட்டாள்.

''என்ன இது, அந்தி வேளையிலே! ஏதுக்காக இப்படி அழுகிறாயாம்!'' என்று ஆதரவுடன் வினவிய குரலைக் கேட்டுப் பரபரப்பாக எழுந்து நின்ற பாஞ்சாலி தன்னை அன்புடன் பார்த்துக்கொண்டு தங்கசாமி எதிரே நிற்பதைக் கண்டாள்.

''ஒன்றுமில்லை'' என்று கூறிவிட்டுத் தலையைக் குனிந்துகொண்டாள் அவள். சில நாட்களில் கணவனாகப் போகிற தங்கசாமியை நிமிர்ந்து பார்க்கக்கூட அவளுக்குக் கூச்சமாக இருந்தது.

''காரணமில்லாம அழுவாங்களா யாராச்சும்?'' என்று கேட்டான் அவன் கொஞ்சலாக.

''ஆமாம்! நான் ஒண்ணு கேட்கிறேன். கோவிச்சுக்காம பதில் சொல்றீங்களா?'' என்று தைரியத்தை வரவழைத்துக் கொண்டு மெல்ல ஆரம்பித்தாள் பாஞ்சாலி. ''விளையாட்டுக்காக நான் சபதம் வச்சுப் பேசிவிட்டேன். அதை மனசுலே வச்சிக்கிட்டு என்னைக் கட்டிக்கொண்டதும் மத்த ரெண்டு பெண் சாதிகளையும்போல என்னைத் தள்ளிவைச்சுட மாட்டீங்களே!'' என்று தழுதழுத்த குரலில் கேட்டாள்.

''எனக்கு இரண்டு பெண் ஜாதிகள் இருக்கிறதை உனக்கு யார் சொன்னது!'' என்று கேட்டான் அவன்.

பிரமிப்புடன் நிமிர்ந்த பாஞ்சாலி ஆச்சரியத்துடன் அவனை நோக்கினாள். ''பெரியசாமி மகன் இரண்டு பெண் ஜாதிகளைக் கட்டிக்கொண்டான் என்று ஊரிலே எல்லாரும் சொல்றாங்களே'' என்று வியப்புடன் கேட்டாள் அவள்.

''பெரியசாமி தங்கச்சி மகன் தங்கசாமி வேறே, பெரியசாமி அண்ணார் மகன் தங்கசாமி வேறே, தெரிஞ்சுக்கோ!



கிழவன் பெரியசாமி செத்ததும் சொத்து நியாயப்படி அண்ணார் மகன் என்னைச் சேருகிறது. அதனாலே நான் வந்தேன், நீ நினைச்ச தங்கசாமி டவுனிலே பழ வியாபாரம் பண்ணுகிறான். இந்தத் தங்கசாமிக்கு ஒரே ஒரு பெண் ஜாதிதான். அவள் பேரு பாஞ்சாலி'' என்று சிரித்த தங்கசாமி அவள் முகத்தை ஆசையுடன் பார்த்தான்.

பாஞ்சாலிக்கு வெட்கம் தாங்க முடியவில்லை. பதில் பேசாது குனிந்த தலையுடன் நின்றுகொண்டிருந்த அவளிடம், ''எப்படி இருந்தால் என்ன? பாஞ்சாலியின் சபதம் நிறைவேறிச்சல்லவா?'' என்று கேட்ட தங்கசாமி சிரித்தான். பாஞ்சாலியின் உள்ளம் பூரித்தது.

# சித்தப்பாவின் சொத்து

புகையிலை வியாபாரி கந்தசாமிப் பிள்ளை காலமாகி இருபது நாட்கள் உருண்டோடு விட்டன. அவரது ஈமக் கிரியைகள் முடியும்வரை 'சுந்தர பவன'த்தில் வந்து குவிந்திருந்த அவரது சுற்றத்தார்கள் எல்லோரும் ஒருவர் பின் ஒருவராகத் தங்கள் ஊருக்குத் திரும்பிச் சென்று விட்டனர். பிள்ளையவர்களின் சொத்துக்குச் சட்டப்படி வாரிசுகளான அந்த நான்கு பங்காளிகள் மட்டும் தங்கள் குடும்பத்துடன் 'சுந்தர பவன'த்தில் இன்னும் சில நாட்கள் தங்க நேர்ந்தது.

கந்தசாமியின் உயில் பிரகாரம் அவருடைய பங்களா, ரொக்கப் பணம், வீட்டிலுள்ள பொருள்கள் ஆகியவற்றைக் குமரேசன், கோதண்டம், அகல்யா, சுந்தரமூர்த்தி என்ற நான்கு பேர்களும் சமமாகப் பங்கிட்டுக்கொள்ள வேண்டியவர்கள். கந்தசாமிப் பிள்ளையின் குடும்ப வக்கீல் வரதராஜலு நாயுடு, பிள்ளைவாள் காலமான மூன்றாவது நாள் அவருடைய உயிலின் தாத்பரியத்தை எடுத்து வாரிசுதாரர்களுக்கு நன்கு விளக்கினார். பங்களா, அதில் உள்ள